அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 26/2023

எனது இலக்கம் : EST-3/04/POL/0064
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2023.12.22

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைத் தலைவர்கள்

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தோற்றிய அரசியல் உரிமைகள் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.**

2023 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்ட அரசியல் உரிமைகள் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கு சலுகைகளை வழங்கி வெளியிடப்பட்ட 04.06.2023 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 06/2023 மற்றும் 05.08.2023 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2023 இற்கு மேலதிகமாக பின்வரும் சலுகைகளை வழங்க 18.12.2023 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதன்படி

அ. உள்ளாட்சி அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் செய்கின்றமையினால் சிரமத்துக்குள்ளாகிய அரசியல் உரிமைகள் கொண்ட ஒரு உத்தியோகத்தர் இது தொடர்பாக மேன்முறையீடு செய்வதாயின், திணைக்களத் தலைவர் மூலம் அது தொடர்பில் பரிசீலித்து, குறித்த சேவை நிலையத்தின் அரசியல் செயற்பாடுகளில் அல்லது அரசியல் பிரசாரங்கள், ஊக்குவிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடாது செயலாற்றுவதாக அவ்உத்தியோகத்தர்களிடமிருந்து உறுதிமொழி பெற்ற பின்னர் தனது நிரந்தர சேவை நிலையத்துக்கு அறிக்கை செய்ய இடமளிக்கப்பட வேண்டும்.

ஆ. 25.04.2023 ஆம் திகதி முதல் 08.05.2023 ஆம் திகதி வரையிலான காலகட்டம் ஊதியத்துடன் கூடிய விடுப்பாகக் கருதப்பட்டு அடிப்படைச் சம்பளம் வழங்கப்படவேண்டும்.

இ. 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுக்களை வழங்கியுள்ள அரசியல் உரிமைகள் கொண்ட உத்தியோகத்தர்கள் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2023 இன் படி கட்டாயம் சேவைக்கு அறிக்கையிட வேண்டும்.

03. மேலே (அ) இன் படி அனைத்து மேன் முறையீட்டு நடவடிக்கைகளும் 22.01.2024 ஆம் திகதியாகும்போது முடிவுறுத்தப்படவேண்டும்

04. இந்த சுற்றறிக்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/. கே.டி.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011-2692159
தொலைநகல் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ade-iii@pubad.gov.lk